புலிகளின் வீரத்திற்கு தலை வணங்குகிறேம்; அதேசமயம் ஒரு கெரில்லா எதிர்ப்பு யுத்த பயிற்சியுடன் செல்கிறேம்

இந்திய இராணுவ அதிகாரி

(திருமலையிலிருந்து நமது நிருபர்)

புலிகளின் வீரத்திற்கு தலை வணங்குகிறேம். அவர்களிடம் ஒரு சிறந்த கெரில்லா யுத்த பயிற்சியை பெற்றுள்ளோம். இவ்வாறு நேற்று திருகோணமலையில் வைத்து இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் 'முரசொலி' நிருபருக்கு தெரிவித்தார். நாம் காடு, மலை, ஆறு எதுவுமே இல்லாத ஒரு பிராந்திய கெரில்லா யுத்தத்திற்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்ற பயிற்சியை 2000 வீரர்களை இழந்ததன் மூலம் பெற்றுள்ளோம். தோல்வியைக் கண்ட இந்த யுத்தத்திற்கு எவ்வளவு பணம் இந்திய அரசால் விரைய செலவழிக்கப்பட்டது என நமது நிருபர் கேட்டபோது ஒரு இராணுவம் தாயகத்தில் இருந்தால் என்ன அந்நிய நாட்டில் —8 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

முரசொலி

மலர் 04 ஒலி 49 ஞாயிறு 25-03-1990 (பங்குனி 12) ஷஃபான் 27

நேற்றைய இந்தியப்படை வெளியேற்றம் புதிய வரலாற்றுத் திருப்பம் -பாலசிங்கம்

இனி ஒரு இந்தியத் தலையீட்டை புலிகள் அனுமதிக்கப் போவதில்லை

நேற்றைய இந்திய இராணுவ வெளியேற்றம் புதிய வரலாற்றுத் திருப்பம் ஒன்றை படைத்திருக்கிறது இந்திய இராணுவத்தை இந்த மண்ணிலிருந்து வெளியேற்றிய காரணகர்த்தா பிரபாகரனே என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று மாலை முரசொலிக்கு தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரனின் தனி சிறந்த போர்த்திட்டம், இரும்பு போன்ற இலட்சியப் பிடிப்பு, இராஜதந்திர சாணக்கியம், எமது போராளிகளின் அற்புதமான தியாகங்கள் எமது இயக்கம் மீது மக்களுக்கிருந்த நம்பிக்கை இத்தகைய காரணங்களே இந்திய இராணுவம் தோல்வியை தழுவிய நிலையில் இந்த மண்ணை விட்டு வெளியேற காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய இராணுவ, அரசியல் தலையீட்டை நாம் இனிமேல் அனுமதிக்கப் போவதில்லை ஆனால் எமது மக்களின் போராட்டத்திற்கு தார்மீக ஆதரவை வேண்டி நிற்கிறோம். இந்திய அரசின் தலையீடு என்று நாம் குறிப்பிடுவது —8 ஆம் பக்கம் பார்க்க

5000ற்கு மேற்பட்ட தமிழர் இந்தியப் படையால் பலி

இரண்டரை வருடங்கள் எமது மண்ணில் இந்திய இராணுவ தலையீட்டால் ஈழத்தமிழினத்திற்கு எந்த நன்மையும் கிடைத்ததில்லை மாறாக மாபெரும் அழிவுக்கே வழிவகுத்தது. இந்திய இராணுவ யுத்தத்தால் 6000 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் 5000 பேர் படுகாயம் அடைந்தனர் பல கோடி ரூபா பெறுமதியான உடைமைகள் சேதமாக்கப்பட்டன என்று கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இந்தியப்படை தனது பங்களிப்பை நிறைவு செய்துள்ளது - கல்கட்

இந்தியப்படை தமது உயர்த்தலீயாகத்தின் மூலம் தமது பங்களிப்பை நிறைவு செய்துள்ளது என் இந்திய அமைதிப்படைத் தளபதி லெப். ஜனரல் கல்கட் நேற்று திருமலையில் அமைதிப்படையின் பிரியாவிடை வைபவத்தில் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்புராஜாங்க அமைச்சரு — 8ம் பக்கம் பார்க்க

சென் ஜோன்ஸ் கல்லூரியிடம் சென்ரல் இனிங்ஸால் தோல்வி

பல்லாயிரக்கணக்கானயாழ் மாவட்டக் கிரிக்கெற் ரசிகர்களால் மிருந்த ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 87 ஆவது சென்ரல் - சென். ஜோன்ஸ் கிரிக்கெற் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி இனிங்ஸால் வெற்றியீட்டியது.

சுமார் ஐந்து ஆண்டுகள் — 8ம் பக்கம் பார்க்க

ஒரிஸா தமிழ் அகதிகள் அந்தமான் செல்வர்

(புதுடில்லி)

ஒரிஸா மாநிலத்தில் தற்போது தங்கியுள்ள இலங்கை அகதிகள் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அனுப்பப்படவுள்ளனர். ஒரிஸா முதலமைச்சர் பட்னயக் இந்துஸ்தான் ரைம்ஸ் ஊக்கு அளித்த பேட்டியில் ஒரிஸாவில் உள்ள 1,600 இலங்கையரையும் அந்தமான் தீவுகளுக்கு அனுப்ப ஆலோசிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

ரஞ்சன் வடகிழக்கு விஜயம்

வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரட்ன நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்தார்.

அமைச்சருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல,, முப்படைத்தளபதிகள், மற்றும் அதிகாரிகள் சகிதம் நேற்று — 8 ஆம் பக்கம் பார்க்க

அன்னை பூபதி நினைவாக மட்டு. மாணவர் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

அன்னை பூபதியின் நினைவு நாள் நேற்று 6வது நாளாக மட்டக்களப்பில் அனுட்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் அடையாள உண்ணாவிரதம் அனுட்டித்தனர்.

இந்துக் கல்லூரி, சிவானந்தா கல்லூரி, வின்சன்ட் மகளிர் கல்லூரி, உட்படமட்டக்களப்பு —8 ஆம் பக்கம் பார்க்க

இறுதி இந்திய வீரர் பயணம்

இலங்கையில் தங்கியிருந்த இந்திய இராணுவத்தின் கலடசி அணி நேற்று திருமலை துறைமுகத்தில் இருந்து காலை ஒன்பது மணி ஐம்பத்தைந்து நிமிடமளவில் இந்தியா புறப்பட்டது.

சுமார் இரண்டாயிரம் இந்திபப்படையினர் மூன்று கப்பல்களில் இந்தியா நோக்கி புறப்பட்டனர், இவர்களின் —8 ஆம் பக்கம் பார்க்க

ஹமீத் மட்டு. விஜயம் திடீர் ரத்து

உயர்கல்வி, விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ஜனப். ஏ. சி. எஸ். ஹமீதின் மட்டக்களப்பு விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை அமைச்சர் ஹமீத் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து மூஸ்லிம் பிரமுகர் — 8 ஆம் பக்கம் பாக்க

தமிழ் மக்கள் மீது 'ரோ'வின் தலையீட்டை நிறுத்துமாறு விடுதலைப் புலிகள் வி. பி. சிங் அரசிடம் கோரிக்கை

இலங்கைத் தமிழ் மக்கள் மீது இந்திய உளவுப்படையான ''ரோ'' வின் தலையீட்டை கட்டுப்படுத்துமாறு கலைஞர் கருணாநிதி மூலமாக வி. பி. சிங் அரசை கேட்டுள்ளோம். என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். ''ரோ'' சில சந்தர்ப்பங்களில் தன்னிச்சையாகவும் நடந்து வந்திருக்கிறது. எமது கோரிக்கையின்பின் ''ரோ''வின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அதன் தலையீடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது தெரிகிறது. புலிகள் அரசியல் நீரோட்டத்திற்கு வந்தது இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் என பிரசாரம் செய்யப்படுகிறது. இந்திய இராணுவ அழுத்தத்தால் நாம் பேச்சுக்கு போகவில்லை. ஜனதிபதி பிரேமதாஸ பலமுறை விடுத்த வேண்டுகோளை அடுத்து எமது — 8 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம்

இரா. செல்வவடிவேல்

வழமையான நேர அட்டவணைப்படி வகுப்புக்கள் யாவும் நடைபெறுகின்றன

இல. 2, சினிவாசகம் வீதி;
கொட்டடி யாழ்ப்பாணம்.
03167

APPRENTICE OF PHARMACIST

BASIC QUALIFICATION
Written knowledge in English
Period of course: 6 Months
Rcgistration of Pharmacist (External)

MEDICAL COLLEGE COUNCIL COLOMBO

Registration made by:-
Sayi Medical Academy
Sat & Sun Classes
Contact:-
Dr. V. P. Sundararajan
10, Point-Pedro Road, Jaffna.
03199

சிறு விளம்பரம்

தேவை
யாழ்ப்பாணம் ஸ்ராண்லி வீதியில் 45 வருடமாக இயங்கும் ஹாட்வெயர் (இரும்புப் பொருட்கள்) ஸ்தாபனத்திற்கு முதலீட்டுடன் முழு நேரப்பங்காளர் தேவை, விபரங்களுடன் எழுத்தமூலம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல. 288. மே/பாமுரசொலி யாழ்ப்பாணம். 03198

தேவை
வெல்டிங், கேட் வேலை செய்யக்கூடியவர்கள் தேவை உடன் வரவும். நியூடீசன்ஸ்கேட்ஸ் வேக்ஸ் 23 பிள்ளையார் கோவில் லேன், முஸ்.கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 03195

தேவை
யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியராக தொழில் புரியும் 34 வயதுடைய சலவைத் தொழிலாளர் இனத்தைச்சேர்ந்த பெண்ணுக்கு நற்பண்புடைய அரசாங்க, தனியார்துறைகளில் தொழில் புரியும் மணமகன் தேவை முதல் கடிதத்திலேயே படம், ஜாதகம் மற்றும் விபரங்களுடன், விளம்பர இல. 289 மே/பா மூரசொலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும் 03188

விற்பனைக்கு
O/L, A/L அனைத்து பாடங்களுக்கான Tutes மலிவுவிலையில் (clearence sale) 21-3-90 முதல் 5-4-90 வரை விற்கப்படும். Bond Institutes 58, A, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம். 03200

தேவை
28 வயது நிரம்பிய A/L படித்த அழகிய பிராமண குலப் பெண்ணுக்கு அதே குலத்தைச் சேர்ந்த 30-35 வயதுடைய, நல்லொழுக்கமும் நிரந்தர உத்தியோகமுடைய மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தகுதிக்கேற்ப சீதனம் கொடுக்கப்படும். விளம்பர இல. 290மே/பாமுரசொலி, ஸ்ராண்லிவீதி, யாழ்ப்பாணம். 03203

கல்வி
இலங்கைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை போன்றவற்றில் வேலைசெய்பவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமையிலும், கிழமைநாட்களில் இரவு நேரத்திலும் நடத்தப்படும். தனிப்பட்டோர்களுக்கான (INDIVIDUAL TUITION) பயிற்சிகளும் அளிக்கப்படும் விபரங்களிற்கு: எஸ் ஜெயராஜா, கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் ரோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம், 03056

ஓராண்டு சென்றதுவோ...

வீரவேங்கை

லெப்டினன்ட் முகுந்தன்

வீரத்தில் ஜனனம்
27 - 01 - 1968

வெற்றியில் மரணம்
25 - 03 - 1989

தீராத பல வேட்டுக்குள்ளும்,
நீரமுடன் போராடும் புலிகளுக்குள்ளே
உன் பசியாக உருவான ஈழத்தினுள்ளும்
உறுதியுடன் போராடும் நெஞ்சதனுள்ளும்
உரம் கொண்ட போராளிகளுக்குள்ளே - முகுந்தா
உன்முகம் காணுமல் தவிக்கின்றோம்.
மிகுந்த தமிழ் இனத்து விடிவிற்காய்
வீறுடன் போர்க்களத்துச் சென்ற வீரா
ஜேஆரின் கூலிப்படையுடன் வெற்றி கண்டாய்
ராஜீவின் படையுமல்லோ ஓட வைத்தாய்
எமக்களின் துரோகக் கும்பலை விரட்டியடித்தாய்
உன் வெற்றித் துணிவு வீரமெல்லாம் எம்
மக்களுக்கும் உனை ஈன்றெடுத்த தாய்க்கும் சேரும்
மீண்டும் இம் மண்ணில் வாராயா முகுந்தா
நலிதயக் காவலன் உனை நாம் பிரிந்து
நலியும் ஓராண்டு இன்றுபோல ஓடி
நெஞ்சினையே பிளப்பதுபோல் நெருடுகின்ற
நினைவுகளை வடித்திடவே வரிகள் போதா.....

நெஞ்சு குமுறும் கட்டுடைவாழ் மக்கள்

03196

1-வது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
13-6-1960

அகால மரணம்
4.4 1989

அமரர் க. கனகசிங்கம் (நாதன்)

(யாழ்-கிளிநொச்சி மினிபஸ் நடத்துநர்)

அன்பின் திருவுருவமாய் அறிவின் சுடரொளியாய்
பண்பின் உறைவிடமாய் — பாசத்தின் பிறப்பிடமாய்
சிரிப்பின் நிறைமதியாம் மீசாலை-ஊரின் ஒளி விளக்காய்
இருந்து எம்மை விட்டுப் பிரிந்து சென்ற எங்கள் அன்பு தெய்வம்

நாதனே! நீ பிரிந்து சென்றாலும் உன் உருவமும்
நினைவும் எம் மனதைவிட்டு என்றும் அகலாது
நிலைத்து நிற்கும்

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள்.
சகோதரர்கள், மாமன், மாமிமார்,
மைத்துனர், மைத்துனிமார், உறவினர்,
க. வீரசிங்கம், நண்பர்கள்.
மீசாலை வடக்கு,
கொடிகமம். 03201

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
1990 / 91

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

★ கலைமாணி B. A.
★ விஞ்ஞானமாணி B. Sc.
★ வணிகமாணி B. Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

விபரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10 செலுத்திநேரில்/ தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 31-3-1990

புதியபிரிவு விரிவுரைகள் 1.4.1990 ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு

உதவிப்பதிவாளர்.

பட்டப்படிப்புகள் கல்லூரி
148,1 ஸ்ராண்லி வீதி,
யாழ்ப்பாணம்.
03190

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஊழியர் உரிமைகள்

மட்டக்களப்புக் கல்வித் திணைக்கள ஊழியர் தமக்கு வழங்கப்படவேண்டிய ஐம்பது வித ஊக்குவிப்பு அலவன்ஸ் இன்னும் வழங்கப்படாததை ஆட்சேபித்து வெளிநடப்பு.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர், இரசாயனத் தொழிற்சாலையில் உற்பத்தியை அதிகரிக்குமாறு கோரிக் கோஷ அட்டைகளைத் தாங்கியவாறு மறியற் போராட்டத்தில் குதிப்பு

யாழ் தபால் திணைக்களத்தில் உள்ள சமயாசமய ஊழியர்கள் அனைவரும் தமக்கு நிர்வாக ரீதியாக, நியாயமான தீர்வு கிடைக்கும் வரை வேலைமறிப்புச் செய்யப் போவதாக அறிவிப்பு.

வவுனியாவில் இலங்கைப் போக்குவரத்துச் சபை இயந்திரவியல் பகுதி ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து அவ்வூழியர்கள் வேலை நிறுத்தம்.

இவையெல்லாம் எமது வியாழக்கிழமைப் பத்திரிகையின் முற்பக்கச் செய்திகள்.

ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்டத்திலும் வெளிநடப்பு, வேலைநிறுத்தம், வேலை மறிப்பு மறியற் போராட்டம் என்று பரவலாக நடைபெறுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

எட்டுமணித்தியால வேலை, உழைப்புக்கேற்ற ஊதியம், வேலைத்தலப் பாதுகாப்பு, தொழிலுக்குப் பாதுகாப்பு, பதவி நியமனங்களில் நேர்மை, பதவியுயர்வுகளில் ஒழுங்குமுறை போன்ற இன்னோரன்ன அம்சங்களே பெறப்பட்டு வந்தது என்பது வரலாறு.

எட்டுமணித்தியால வேலை என்பதுகூட சிக்காக்கோ நகரில் சிந்திய இரத்தத்தினாலும், பலிகொடுக்கப்பட்ட உயிர்களினதும் விலையாகத்தான் கிடைக்கப் பெற்றது.

நமது நாடு தேசிய இனச் சிக்கலுள் ஆழ்ந்து போயுள்ள இன்றைய நிலையானது தமிழ் ஊழியர்களைப் புறந்தள்ளி விடுகின்றது.

தொழில்வாய்ப்பு, இனவிகிதாசார அடிப்படை, தொழிலாளர் நல உரிமைகள் என எவ்வளவு சட்டங்கள் இயற்றப்பட்டு, வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வந்தாலும் அவை காற்றோடு கலந்த சேதிதான்.

எனவே தமிழ் ஊழியர்களைப் பொறுத்தவரையில் இது இரட்டைச் சுமையாகிறது. ஒன்று இனரீதியான பாகுபாடு காட்டப்படல். இரண்டு, தமிழ்ப்பகுதிகளிலுள்ள சிவில் நிர்வாகச் சீரின்மை ஊழியர்களின் உரிமைகள் பேணப்படாதிருக்க வாய்ப்பளித்தல்.

இந்நிலையில் இவற்றிற்கெதிராகப் போராட்டங்கள் எழுதல் தவிர்க்க முடியாதவையாகின்றன. இதனைத் தவிர்க்க வேண்டுமானால் சம்பந்தப்பட்ட அனைவரும் இப் பிரச்சினைகள் தொடர்பாக நியாயாதிக்க முடிவுகளை எடுத்துச் செயற்பட வேண்டும் என்பதே எமது கருத்து

இதயநாதம்

சனிக்கிழமை 25-03-1990

நல்வாக்கு

பிறர் வருந்துமாறு செய்து பெற்ற பொருள் எல்லாம் பெற்றவன் வருந்துமாறு செய்து போய்விடும்

திருக்குறள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

★ திரை அரங்குகளுக்குள் நமது நிருபர் விசிட் (2)

சுவரொட்டியில் உள்ள படங்கள்

திரையில் தேடினாலும் கிடையாது

"ஆஸ்பத்திரி சிற்றுண்டிச்சாலையிலே சிகரெட் விற்கப்படும் போது அதைத் தட்டிக் கேட்காமல் திரையரங்கில் சிகரெட் விற்பது பற்றி எழுதுவது எந்த வகையில் நியாயம்"

– திரையரங்கு ஊழியர்

திரையரங்குகளுக்கு இப்போது நல்ல வருமானம் கிடைக்கத் தொடங்கி இருக்கின்றது. கடந்த காலங்களில் திரையரங்குகளை இழுத்து மூடவேண்டிய நிலையே காணப்பட்டது. இதனால் பல ஊழியர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்தனர்.

இப்போது நிலைமை சீரடைவதால் திரைப்படம் பார்க்க தினமும் ரசிகர்கள் தூர இடங்களில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றார்கள். சில தினங்களுக்கு முதல் யாழ். ஸ்ரான்லி வீதியில் லான்ட் மாஸ்ரரில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பயணம் செய்து கொண்டிருந்தனர் அவர்கள் எங்கு போகிறார்கள் என்று பார்க்க நாம் சைக்கிளில் பின் தொடர்ந்தபோது அவர்கள் திரையரங்கு ஒன்றிற்குள் செல்வதைக் காண முடிந்தது.

சனநடமாட்டம் அற்று இருந்த திரையரங்குகளுக்குள் நடமாட்டம் அதிகரித்து விட்டது. ஆனால் திரையரங்குகளை திருத்தி அமைப்பதற்கு திரையரங்குச் சொந்தக்காரர்கள் சிலருக்கு மனம் வந்ததாகத் தெரியவில்லை.

ஆசனங்கள் பல கிழிந்த நிலையிலே காணப்படுகின்றன. ஆணிகள் வெளியே தலையை நீட்டிக் கொண்டிருப்பதால் பலருடைய உடைகளை இவைகள் கிழிக்கின்றன.

இப்போது திரையரங்கில் மூட்டைப்பூச்சிகளுக்குப் பஞ்சமில்லை. அரங்கில் அடிக்கடி தம்மை மறந்து நித்திரை கொள்பவர்களை அவைகள் தான் ஐந்துநிமிடத்திற்கு ஒரு தடவை எழுப்பி உதவி செய்கின்றன. இப்படியான நல்ல உதவிகளைச் செய்யும் திரையரங்குச் சொந்தக் காரர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

திரையரங்குகள் சிலவற்றில் மலசல கூடங்கள் சுத்தமாக இல்லை. இந்த விடயத்தில் அவர்களை மட்டும் குற்றம் சொல்வதால் பயனில்லை. பலருக்கு பொது மலசல கூடங்களை எப்படிப் பாவிப்பது என்றே தெரியவில்லை. கண்ட இடங்களில் உமிழ் நீர் துப்புவது, மலங்கழிப்பது போன்ற இழிவான வேலைகளை செய்கின்றனர். மற்றவர்களுக்கும் பயன்பட வேண்டுமே இது எமக்கு மட்டும் சொந்தமான தல்ல என்ற மனநிலை எம்மத்தியில் குறைவாக இருக்கின்றது.

பொதுச்சொத்துக்களை பாதுகாக்க வேண்டும் என்ற பொது உணர்வு மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது.

திரையரங்குகள் சுத்தமாகவும் காற்றோட்டம் உள்ளவையாகவும் இருத்தல்வேண்டும். திரையரங்கு ஒன்றில் சுழன்று கொண்டிருக்கும் மின்விசிறி விரைவில் படம் பார்க்கும் ரசிகர் மேல் விழுந்து காயப்படுத்தினாலோ அல்லது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தினாலோ ஆச்சரியப்படுவதற்கில்லை.

உதாரன்

இந்த அபாயகரமான மின்விசிறிகளைப் பற்றி அரங்குச் சொந்தக்காரர் அக்கறைப்பட்டதாக தெரியவில்லை. யார் என்ன ஆனாலும் பறவாயில்லை எனக்குத் தேவை... பணம் .. பணம்... பணத்திற்காக.....!?

சில திரையரங்குகளில் நெருக்கமாக இருக்கைகள் போடப்பட்டிருக்கின்றன. சில அரங்குகள் பின்வரிசையில் இருப்பவர்களை முன் வரிசையில் உள்ளவர்கள் மறைக்காத முறையில் படிப்படியாக அமைக்கப் பட்டிருக்கின்றன. இதனால் சிறியவர்கள் உயரம் குறைந்தவர்கள் எவ்வித இடையூறுமின்றிப் படத்தைப் பார்க்க முடிகிறது.

இப்படி ரசிகர்களின் வசதி கருதி அமைக்கப்படாத திரையரங்குகள் சிலஇருக்கின்றன. வேறு சில திரையரங்குகளில் ஆசனங்கள் ஒழுங்கு முறையில் இல்லை. சில ஆசனங்கள் உயரமாக இருக்கின்றன சில ஆசனங்கள் சம அளவிலும் உயரம் குறைந்தவையாகவும் இருக்கின்றன.

இப்படியான திரையரங்குகளில் படம் பார்க்கும் ரசிகர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள் இனிமேலாவது திரையரங்குச் சொந்தக்காரர்கள் வசதிகருதி மாற்றங்களைச் செய்வார்களா? என்று ரசிகர்கள் கேட்கின்றார்கள்... இவ்வினாவிற்கானவிடை திரையரங்குச் சொந்தக்காரர்களின் மனநிலையைப் பொறுத்தே அமையும்.

சில அரங்குகளில் பொருத்தப்பட்டிருக்கின்ற ஒலிபெருக்கிகள் இலங்கை வானொலி இரைந்தது போல் இரைகின்றன சிலவேளை ஊளையிடுகின்றன. புதிய ஒலிகளையும் எழுப்புகின்றன. படம் காண்பிக்கப்படும் திரைகள் கூட தெளிவாக இல்லை. சில திரைகளில் பல பொருத்துக்களைக் காண முடிகிறது.

படங்களுக்கு விளம்பரம் செய்யும் பேரது திரையரங்கிற்குவெளியே அப்படத்தில் இடம் பெறுத காட்சிகளைக் கொண்ட புகைப்படங்களை ஒட்டுகிறார்கள். படத்தைப்பார்த்து விட்டு இப் புகைப்படங்களை மீண்டும் பார்த்தால் அப்படத்திற்கும் வெளியே ஒட்டப்பட்ட புகைப் படத்திற்கும் தொடர்பு இருக்காது. ரசிகர்களைக் கவரவே இப்படியான தந்திரங்களைப் பயன் படுத்துகிறார்கள்.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல் நகரில் ஒரு வழக்கு நடந்தது. திரையரங்குச் சொந்தக்காரர் படத்தில் இப்படியான காட்சிவருகிறதுஎன்று விளம்பரம் செய்திருந்தார் அந்த ரசிகர் படத்தைப் பார்த்தபோது படத்தில் அந்தக்காட்சியில்லை. உடனே திரையரங்குச் சொந்தக் காரருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். வழக்கின் முடிவில் ரசிகர்களை ஏமாற்றியமைக்காக அந்த ரசிகருக்கு குறிப்பிட்ட ஒரு தொகையை நட்டஈடாக வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தமையை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று ஆங்கிலப் படங்களுக்கு விளம்பரம் செய்யப்படுகிறது இப்படி விளம்பரம் செய்து விட்டு சிறுவர்களையும் இப் படங்களைப் பார்க்க அனுமதிக்கிறார்கள்.

வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று எழுதப் பட்டிருப்பதால் அப்படங்களை ஆபாசமாக இருக்கும் என்று பல ரசிகர்கள் நினைத்து விடுவது உண்டு; பயங்கரமான அல்லது அதிர்ச்சியைத் தரக்கூடிய படங்களைப் பார்க்க வயது வந்தவர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும் இதனால் இப்படங்களுக்கும் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற வாசகம் பயன் படுத்தப் படுகிறது.

இப் போது வருமானத்திற்காக திரைப்பட சொந்தக்காரர்கள் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற வாசகத்தைப்பயன்படுத்திப் பணத்தை

சம்பாதிக்க விரும்புகிறார்கள்:

சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம் பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம் எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது.

எல்லா திரையரங்குகளிலும் காண்பிக்கப்படும் படங்கள் ஒரே நோக்கத்திற்கு முடிவடைவதால் வீதிப் போக்குவரத்தில் நெருக்கடி ஏற்படுகின்றது. கடந்த சில வாரங்களாக சிறு சிறு விபத்துக்களும் ஏற்படுகின்றன.

போக்குவரத்தும் சில நிமிடங்கள் தடைப்படுகின்றன.

— 7 ஆம் பக்கம் பார்க்க

"புத்தம் புதிய பிரதி"

புத்தம் புதிய பிரதி என்று திரையரங்கிற்கு வெளியே எழுதப் பட்டிருக்கும். ரசிகர்கள் புதிய பிரதி என்றால் பார்க்கலாம் என்று நிரையரங்கிற்குள் நுழைந்த பின்னர்தான் ஏமாற்றப் பட்டு விட்டோம் என்ற உண்மை அவர்களுக்குத் தெரியவருகின்றது. இப்படியான ஏமாற்று வேலைகளில் சில திரையரங்குகள் ஈடுபட்டு வருகின்றன.

திரையரங்குள் புகையாதீர்கள்'னில் சிகரெட்விற்பனை

''திரையரங்கிற்குள் புகைக்காதீர்கள்'' என்று எழுதப்பட்டிருக்கின்றது ''ஆனால் அரங்கிற்குள் இருக்கின்ற சிற்றுண்டிச்சாலைகளில் சிகரெட் தாராளமாகக் கிடைக்கிறது. இப்படி நிலைமை இருக்கும் போது ''திரையரங்கிற்குள் புகைக்காதீர்கள்'' என்றால் ஊருக்குடி உபதேசம் உனக்கல்லடி டெண்ணே... ..... என்று சொல்லாமல் சொல்கிறீர்களோ''!?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிச் செய்திகள்

ஒட்டுசுட்டானில் துக்கவாரம்

ஒட்டுசுட்டான் 19-ம் கட்டையில் அமைந்துள்ள இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக அன்னை பூபதியின் உருவப்படம் அலங்காரப்பந்தலில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. துக்கவார இறுதிநாளன்று அன்னை பூபதியின் ஆத்மா சாந்தியடைய இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபன ஊழியர்களும் அருணோதயா சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் இணைந்து ஸ்ரீ. செல்வ விநாயகர் ஆலயத்தில் அன்னதானம் வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அத்துடன் இவ் அஞ்சலி தினத்திற் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற வுள்ளது. (46)

அடகு நகைகள் கிடைக்குமா?

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் ஏழு வருடங்களுக்கு முன்பு அடகு வைக்கப்பட்ட அடைவு நகைகளை மீளப்பெறுவதற்கு வட்டியுடன் பணம் கட்டப்பட்டு இரண்டு வருடங்களாகியும் நகைகள் இன்னும் மீளளிக்கப் படவில்லை.

அடகு வைத்த விவசாயிகளும் தோட்டக்காரர்களும் இதனால் விவசாயத்தை மேற்கொள்ள முடியாது மிகுந்த கஷ்டத்துக் குள்ளாகி வருகிறார்கள். (46)

இணக்கசபை அமைப்பு

புளியங்குளம் கருவேலன் கண்டல் கூழாமுறிப்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய கிராம சேவையாளர்கள் பிரிவிற் புதிதாக இணக்கசபை அமைக்கப்பட்டுள்ளது. (46)

யாழ். முதல் முல்லை, வரை அன்னைக்கு அஞ்சலி

அன்னை பூபதி வேறு மாவட்டத்திற் தனது உண்ணாவிரதத்தை மேற்கொண்டு உயிர் நீர்த்த போதிலும் யாழ். மாவட்ட மக்களும் முல்லை. மாவட்ட மக்களும் - மிகவும் சிறப்பாக அவரின் நினைவு தினத்தை அனுஷ்டித்து வருகின்றார்கள். யாழ்நகரிலிருந்து முல்லை நகர் வரை தோறணங்களும் வாழைகளும் கட்டப்பட்டு மிகவும் சிறப்பாக இவரின் நினைவு அனுஷ்டிக்கப்படுகிறது. (46)

மன்னர் கச்சேரி சீட்டிழுப்பு முடிவு

மன்னார்க் கச்சேரி அலுவலர் நலன்புரிச்சங்கம் அதர்ஷ் டலாபச் சீட்டிழுப்பு ஒன்றை ஞாயிற்றுக்கிழமை நடத்தியது. முதலாவது பரிசான டிரான்சிஸ்டர் ரேடியோ, 742-ம் இலக்கச் சீட்டுக்கும் இரண்டாம் பரிசான சுவர் மணிக் கூடு 343-ம் இலக்கச் சீட்டுக்கும் மூன்றாம் பரிசான தேமாஸ் பிளாஸ்க் 691-ம் இலக்கச் சீட்டுக்கும் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஐந்து ஆறுதற் பரிசில்கள் 948, 328, 645, 321, 992-ம் இலக்கங்களுக்குக் கிடைத்துள்ளன பரிசு கிடைக்கப் பெற்றவர்கள் அலுவலக நாட்களிற் பொதுச் செயலாளர் பொ. மாணிக்கவாசகரிடம் பரிசுச்சீட்டை ஒப்படைத்துப் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

செட்டிகுளம் வாழ்வோதய நிர்வாகிகள்

செட்டிகுளம் புனித அந்தோனியார் ஆலய வாழ்வோதயக் கிளையின் நடப்பு வருட நிர்வாகச் சபைத் தெரிவின் போது, தலைவராக ச. மகேஸ்வரன், உபதலைவராக பொ.ஞானேந்திரன், செயலாளர்களாக பி.எட்வின்றெஜி கே.ஏ சின்னராசா ஆகியோரும், இணைப் பொருளாளர்களாக சு. அருளானந்தம், செல்வி தயா ஞானநட்சத்திரம் மற்றும் ஒன்பது பேர்களடங்கிய குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது உத்தியோகத்தர் தெரிவுக் கூட்டம் போஷகர் அருட் திரு.ம. லடிஸ்வால் தலைமையில் நடைபெற்றது.

சமய பரீட்சையில் மன்னர் புறக்கணிப்பு

இந்துக் கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட சைவ சமயப் பாடப் பரீட்சையில் மன்னார் மாவட்ட சைவ மாணவர்கள் பங்கு பற்ற முடியாமல் போனது குறித்து மன்னார் மாவட்ட இந்து சமூக கலாசார நிலையங்களின் பேரவைத் தலைவர் கவனை தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக சைவ அறிஞர்களுடனும், அமைச்சருடனும் தொடர்பு கொண்டு இனி வரும் காலங்களிலாவது இப் புறக்கணிப்பு நிகழாதிருக்க ஆவன செய்ய இவர் கோரியுள்ளார்.

தலைமன்னார் சேவை சீர்குலைவு

மன்னார் இ. போ. ச. டிப்போவிலிருந்து தலைமன்னாருக்கென்று புறப்படும் பஸ்வண்டிகள் சேவையிலீடுபட குறிக்கப்பட்ட நேர அட்டவணை கொடுக்கப்பட்டிருந்தும், நேரக்கணிப்பாளரினதும், சாரதி நடத்துனரினதும் அலட்சியப் போக்கின் நிமித்தம் பிரயாணிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி வருகின்றார்கள் இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார்கொடுத்திருந்தும் மாற்று நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை சாரதி, நடத்துநர்களின் வசதிக்கேற்றவாறு காலதாமதமாவோ அல்லது குறித்த நேரத்திற்கு முன்பாவோ பஸ் வண்டிகளை ஓட விடுவதால் அரச உத்தியோகத்தரும் குறித்த நேரத்துக்குக்கடமைகளைச் செய்ய முடியாதுள்ளது. (17)

மாங்குளத்தில் முன்னணி அலுவலகம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிக் கட்சிக்கு மக்களின் ஆதரவும் நம்பிக்கையும் இரு கண்களாக உள்ளன. உங்கள் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்து வைக்கவும், விடுதலைப் போராட்டத்தை ஒழுங்கு செய்து திட்டங்களைத் தீட்டிக்கொள்ளவும் முல்லைத் தீவில் இம்மாவட்டத்துக்கான மாவட்டக் காரியாலயத்தை திறந்து வைத்துள்ளோம். இக் காரியாலயம் மூலமாக இப்பகுதி நிர்வாகங்களின் நடவடிக்கைகளை கண் காணிப்போம்'',

முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டக் காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றிய முல்லைத் தீவு மாவட்ட அரசியற் பொறுப்பாளர் கைலாஸ் மேற்கண்டவாறு அங்கு கூறினர். (38)

யாழ்.மாவட்டத்தில் வன்செயலினால் பாதிக்கப்பட்ட

வீடுகளுக்கு நிவாரணம் வழங்க 33 கோடி தேவை; இதுவரை இரண்டு கோடி ரூபாவே இங்கு வந்தது

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்கால வன்செயல்களினால் பாதிப்படைந்த மற்றும் அழிந்த வீடுகளுக்கு நிவாரணம் வழங்க 33 கோடி ரூபா தேவை எனத் தெரிய வந்துள்ளது.

இதுவரை இரண்டுகோடி ரூபா மட்டுமே புனர்வாழ்வு அமைச்சினால் யாழ் மாட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த நிவாரண வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்செயலினால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்கவெனப் பதினாயிரம் ரூபா வீதம் நிவாரணம் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே. (03)

தங்க பூபிலி நாயகன் அருட்திரு. பிலிப் பொன்னையா

அருங்கொடையாளரும், புதிய பணித்தளங்களில் முன்னோடியாகப் பணியாற்றும் ஆற்றலும் தலைமைத்துவம் படைத்த அருட்திரு பிலிப் பொன்னையா அடிகள் யாழ் மறை மாவட்டத்திலே குருவாக அரை நூற்றாண்டுப் பணியை நாளை 26ம் திகதி நிறைவு செய்கிறார்.

நேர்மையும் தெளிவான சிந்தனையும், நிறுதிட்டமாக அதே வேளையில் நிதானமும் கொண்ட அடிகளார் 1916 சித்திரை 2-ம் திகதி இளவாலையில் பிறந்தவர். 26-3-1940 இல் இறைபணிக்காய் தன்னை அர்ப்பணித்த இவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் கீழ் பணியாற்றும் அரும் பேற்றினைப் பெற்றார். அதைத் தொடர்ந்து, அனுராதபுரத்திலே 20 மேற்பட்ட பங்குத் தளங்களைத் தன் பணிக்களமாக்கி தன்னந்தனியே சேவையாற்றினார். பின் பாஷையூரிலே பங்குக்குருவாகி அங்கிருந்து ரோமை நகருக்கு உயர் கல்விக்காகச் சென்று அங்கு சட்டத்திலே கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 'சும்மா-கும்-லவுடே' என்னும் அதி உயர் தரத்தில் இப்பட்டத்தைப்பெற்றுக்கொண்டார்

யாழ் திரும்பிய இவர் ஊர்காவற்துறையில் பணியாற்றினார். பின் செட்டிகுளத்தில் முதற் பங்குக் குருவாகி அங்கு 12 ஆலயங்களைக் கட்டியெழுப்பினார்.

இவருடைய அயராஉழைப்பையும் பின் வாங்காத தன்மையையும் கண்ட திருச்சபை அதிகாரிகள் இவரை யாழ் புனித மடுத்தீனார் குருமடத அதிபராகவும், வடமாகாணத்தோலிக்க பாடசாலைகளின் முகாமையாளராகவும் ஆக்கி வைத்தனர் தொடர்ந்து, கிளிநொச்சி யாழ் பேராயம் வவுனியா, மாங்குளம், நாரந்தனை, சோப்பாய், மாதகல் ஆகிய இடங்களில் பணியாற்றினார். 1980இல் யாழ்ப்பாணத்தில் பெரிய குருமடத்தை யாழ் ஆயர் உருவாக்கிய போது அதற்கு தகுதியுடையவராக இவரை அதன் அதிபராக்கி வைத்தார். 1983இல் இக்குருமடம் 85 மாணவர்களையும் மெய்யியல், இறையியல் ஆகிய இரண்டு துறைகளையுமுடைய ஒரு பூரணத்துவக் குருமடமானது. காடாய் இருந்த துண்டியைச் சீர்ப்படுத்தி இறைவனின் திராட்சை தோட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களை உருவாக்கும் இன்பவனமான புனிதபிரான்சிஸ் சவேரியார் குருமடம் ஆக்கியது இவரது கைவண்ணமே.

குருமட அதிபராகவும் நற்செய்தி அறிவிப்பு பணியகத் தலைவராகவும் ஒரேகாலத்தில் கடமையாற்றி மணியம்தோட்டம், உதயபுரம் என்னும் புதிய பங்குகளை உருவாக்கி பூம்புகார் பங்கையும் சேர்த்து அப்பங்குகளையும் நிர்வகித்தார் இவர் தனியொருவராக அன்று ஆற்றிய பணியை இன்றும் பலரி செய்யமுடியாமல் இருப்பது இவரது திறமைக்குச் சான்றாகும்.

இத்தோடு 30 ஆண்டுகளுக்கு மேலாக யாழ் திருச்சபை நீதி மன்றத்தின் பிரதம நீதியரசாகவும் ஆயரின் ஆலோசகராகவும்: செயற்சபை உறுப்பினராகவும் கடமையாற்றி யுள்ளார்.

74 வயதை எதிர்வரும் சித்திரை 2ம் திகதி கொண்டாடும் இவர் யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தின் பங்குத் தந்தையாகவும் இருந்துகொட்டடியில் வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார். இவருடைய கனிவும் இரக்கமும், தூய்மையான தரித்திரமான வாழ்வும் அடக்கமான ஆடம்பரமில்லாத செயற்பாடும் பலரை நல்ல குருக்களாக்கியிருக்கின்றன, யாழ் மறைமாவட்டக் குருக்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், எடுத்துக்காட்டாகவும் திகழும் தங்க விழா நாயகன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்,

அருட்திரு. எம்: எக்ஸ். கருணரத்தினம்

புத்தாண்டு மங்கை தெரிவு ரத்து

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நல்லூர், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடாத்தப்படவிருந்த 'புத்தாண்டு மங்கை' தெரிவுப் போட்டி ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யோகாசன வகுப்பு

சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகி அவர்கள் நடாத்தும் யோகாசன வகுப்புகள் காலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையும் பின்னர் 6மணி தொடக்கம் 7 மணி வரையும் திவ்விய ஜீவன சங்கத்திலும், மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை நல்லை ஆதீனத்திலும் பின்னர் 6:15 தொடக்கம்மாலை 7 15மணிவரைதிவ்விய ஜீவன சங்கத்திலும், சனி, ஞாயிறு இரு நாட்களில் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை சத்திபசாயிபாபா ஆச்சிரமத்திலும்(நல்ல லக்ஷ்மி அவெனியூ நல்லூர்) நடைபெறும்.

ஆண்கள், பெண்கள் இரு பாலாரும், நோயாளிகளும் பங்குபற்றலாம். தியானம், பிராணயாமம், நற்போதனைகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறும் மாத நினைவஞ்சலி

திரு. ஏரம்பு செல்லத்துரை

தோற்றம் 21.09.1915

மறைவு 28.10.1989

என்ன தவஞ்செய் தோமென்றேங்கும் தெய்வம்
எம்இதயகோயிலே வைத்த தெய்வம்
கன்னல்மொழி பேச்சாலே பேசுந் தெய்வம்
காசினியில் மற்றவரும் மதிக்குந் தெய்வம்
சொன்ன மொழிதாக்கின்ற தூய தெய்வம்
துயரங்கள் வந்தாலுங் கலங்காத் தெய்வம்
மின்னலென மறைந்தாயே இவ்வுலகைவிட்டு
மாதங்கள் ஆறு ஆனாலும் உங்கள் பிரிவை எங்களால்
தாங்க முடியவில்லை என்றும் அணையாத தீபமாய் எங்கள் இதயத்தில் குடியிருக்கிறாய்

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்; மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

03207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத வல்லரசுடன் இரண்டு வருடங்கள்

புனித போராட்டம் நடாத்திய பெருமை புலிகளுக்கே உரியது

''சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த அணுகுமுறையுடனும்; புனிதமான போராட்ட உணர்வுடனும்; பிராந்திய வல்லரசான பாரத ஆக்கிரமிப்புப் படையுடன் ஆக்ரோஷமாகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு வருட காலத் தீரம் மிகுந்த ஆற்றல் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியதொன்றாகும்.''

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ''இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பான தீர்மானம்'' என்கிற தலைப்பில் அடங்கிய அவ்வறிக்கையில் :-

''தமிழ் மக்களின் நீதியும், நியாயமுமான உரிமைகள் யாவும் வழங்கப்பட்டு; முழுமையான மாநிலச் சுயாட்சியோ, அன்றிச் சமஷ்டிச் சுயாட்சி மாநில உரிமையோ கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.''

''ஆறாவது திருத்தச்சட்டம் பூரணமாக நீக்கப்பட்டு; அவசரகால நிலைமை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்கள் ஆகியவை அகற்றப்படவேண்டும். கூடவே சிறைவைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியற் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இவற்றின் மூலம் தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையே பரஸ்பரப் புரிந்துணர்வையும்; ஒற்றுமை நல்லெண்ணத்தையும் வளர்த்துக் கொள்ளக் கூடியதாகவிருக்கும்.'' என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகள்

பருத்தித்துறையில்

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை புலோலி கொத்தணி அதிபரும் மேற்படி பாடசாலை பழைய மாணவருமான சே. ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர் சங்கத்தில் சேர விரும்பும்மாணவர்கள்செயலாளரி க. சண்முகநாதன் அவரிகளிடம் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேடகப் பட்டுள்ளனர். (34)

கோண்டாவிலில்

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான உத்தியோகத்தர்கள் தெரிவும் நடைபெறும். (41)

அல்வாயில்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் மகா சபைக்கூட்டம் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நயினையில்

நயினாதீவு நாகபூஷணி அம்மன ஆலயத்தின் 1990-ம் ஆண்டுக்கான வழிபடுநர் வருடாந்தக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியவில் அறங்காவலர் சபைத்தலைவர் நா. மதியாபரணம் தலைமையில் ஆலய கலியாணமண்டபத்தில் நடைபெறவுள்ளது (14)

இந்து மகளிரில

யாழ்- கோட்டக் கல்விப் பிரிவுப் பாடசாலைகளின் தமிழ் மொழித் தினப் போட்டிகள் இன்று காலை 8.30மணி முதல் யாழ்- இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

15 தொத்தணிகள், இரு தேசியப் பாடசாலைகள்,மூன்று தனியார் பாடசாலைகள் ஆகியவற்றில் ஏற்கனவே நடைபெற்ற பூர்வாங்கப் போட்டிகளில் முதலிடம் பெற்றோர் இப்போட்டிகளிற் கலந்துகொள்வர். (40)

புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் பூச்சிமருந்தீற்குத் தட்டுப்பாடு

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் கடந்த சில வாரங்களுக்கு மேலாக பூச்சி மருந்துக்கு என்றுமில்லாத வாறு பெருந்தட்டுபாடு ஏற்பட்டுவிளதாக தெரிய வருகிறது.

இதனால் பெருந்தொகையான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பூச்சி மருந்து கூட கொடுக்க முடியாதநிலையில் தவிக்கின்றார்கள். (20)

நயினாதீவில் இரவு நேரம் கடைகள் உடைத்து திருட்டு

நயினாதீவில் இரு விற்பனவு நிலையங்கள் நள்ளிரவு நேரம் உடைக்கப்பட்டு பல பெறுமதிமிக்க சாமான்கள் திருடப்பட்டுள்ளதாக புகார்கள் தெரிவிக்கின்றன இவைகளில் ஒன்று தனியார் கடை, மற்றையது கூட்டுறவுச் சங்க கிளை விற்பனவு நிலையமாகும். நேற்று முன்தினமிரவு (நேற்று) நடைபெற்ற இத் திருட்டு சம்பந்தமாக மூன்று நபர்கள் விசாரணை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக அறியவருகிறது. (24)

மட்டு. மாவட்டத்தில்

வீடமைப்போருக்கு குறைந்த வட்டியில் கடன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடமைப்பு நிதி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து குறைந்த வட்டியில் வீடமைப்புக் கடன் வழங்கத்திட்டமிட்டுள்ளது.

இத்தகவலை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1500 ரூபா முதல் 5000 ரூபா வரை மாத வருமானம் பெறுவோர் ரூபா 50 ஆயிரம் கடன் பெறலாம். ரூபா 5000 க்கு மேல் சம்பளம்பெறுவோர் 1,50,000 பெறலாம்.

6% வீத வட்டி அடிப்படையில் 15 வருட கால எல்லையில் இக்கடனை திருப்பி செலுத்த வேண்டும். கடன் பெற விரும்புவோர் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றார் (05)

பாப்பாண்டவரின் பிரதிநிதி மூன்று நாள் யாழ். விஜயம்

பரிசுத்த பாப்பாண்டவரின் இலங்கைப் பிரதிநிதி பேரருள் திரு. பிரான்சுவாபக்கே மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுநேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்,

நேற்று முன்தினம் இளவாலை மறை மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இன்று ஞாயிற்றுக் கிழமை பேருட்திரு பிரான்சுவா பக்கே கொழும்புத்துறை புனிதசவேரியார் குருமடம், புனிதபத்திரிசியர் கல்லூரி, திருச்சிலுவைக் கன்னியர் மடம் என்பவற்றுக்கு விஜயம் செய்வார்.

நாளை திங்கட் கிழமைகாலை தோலகட்டி ஆச்சிரமம், வயாவிளான் கன்னியர்மடம் என்பனவற்றுக்கு இவர் விஜயம் செய்வார். அதன் பின்னர் மாலை யாழ்மறைவட்டக்குருக்கள் ஆயர் இல்லத்தில் பேருட்திரு பிரான்சுவா சந்திப்பார். மாலை ஐந்து மணிக்கு பேராலயத்தில் பொது வரவேற்புவைபவம் இடம்பெறும்.

வடக்கு கிழக்கு அடகு நகைகள் மீளளிக்க அஷ்ரப் கோரிக்கை

வடக்கு கிழக்கில் அடகுவைக்கப்பட்ட நகைகளை உடனடியாக வழங்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எஸ். எம். ஹஷ்ரப் பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்கவைக் கேட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் ஏற்பட்டிருந்த நிலைமை காரணமாக இதுவரை காலமும் வங்கியில் அடகு வைக்கப்பட்டிருந்த நகைகள் மீளளிக்கப்படாமல் இருந்தன. இன்று நிலைமை வழமைக்குத் திரும்பியும் அந்த நகைகள் வழங்கப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அஷ்ரப் பிரதமரிடம் கேட்டுக்கொண்டார்.

இதுசம்பந்தமாகத்தான் அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவு பிறப்பித்துள்ளதாக பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்க ஜனுப் அஷரப்பிடம் தெரிவித்தார்,

உதவி வைத்தியர் சங்கக் கூட்டம்

பதிவு, உதவி வைத்திய அதிகாரிகள் சங்க யாழ் கிளையின் அவசரப் பொதுக் கூட்டம் ஏப்ரல் முதலாம் திகதி பிற்பல் இரண்டு மணிக்கு பொண் கல்லூரிக் கழக மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குச் செய்திகள்

முனைக்காடு நிர்வாகிகள்

முனைக்காடு மேற்கு இளைஞர் கழக நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: மா. சண்முகம், செயலாளர்: தா. வேதநாயகம், உபதலைவர்: செல்வி பா. கிருஷ்ணவேணி, உப செயலாளர் அ. மோட்சசீலன், பொருளாளர்: செல்வி இ. சுனிதாதேவி. நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (05)

திருமலைநகரில் உல்லாசப் பயணிகள்

திருகோணமலைக்கு உல்லாசப் பிரயாணிகளின் வருகை கடந்தவாரம் முதல் அதிகரித்துள்ளது.

இந்திய இராணுவம் திருகோணமலை நகரிலிருந்து வெளியேறியதையடுத்து உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

மூடப்பட்டிருந்த ஹோட்டல்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. (05)

தமிழ் ஊழியர் கோட்டை செல்வர்

திருகோணமலை கச்சேரி மீண்டும்பிரடெரிக்கில் இயங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கச்சேரி ஊழியர்கள் பிரடெரிக் கோட்டைப் பகுதியில் உள்ள கச்சேரிக்கு சென்று பணியாற்ற சம்மதம் தெரிவித்துள்ளதையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன அளித்த உறுதிமொழியின் பேரிலேயே அவர்கள் மீண்டும் பிரடெரிக்கோட்டையில் அமைந்துள்ள கச்சேரிக்கு வேலைக்குச் செல்வதாக உறுதியளித்துள்ளார். (05)

புதிய தபால் அத்தியட்சகர்

மட்டக்களப்பு பிராந்திய தபால் அத்தியட்சகராக எஸ். அருணகிரிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு புத் தபால் அத்தியட்சகராகக் கடமையாற்றிய எஸ். பாலகிருஷ்ணன் வவுனியா பிராந்திய தபால் அத்தியட்சகராக இடமாற்றம் பெற்றுள்ளார். (05)

மாணவரும் பங்குபற்றப்பணிப்பு

இலக்கியக் கூட்டங்களில் ஆசிரியர்களும், உயர்வகுப்பு மாணவர்களும் கலந்து கொள்ள ஆவன செய்யுமாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பிரதிக் கல்விப்பணிப் பாளரைக் கேட்டுள்ளார்.

பிரதிக்கல்விப்பணிப்பாளருக்கு அரசாங்க அதிபர் அனுப்பி வைத்துள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலக்கியக் கூட்டங்களில் இடம்பெறும் உரைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய பலதகவல்கள் இடம் பெறுவது தாங்கள் அறிந்ததே.

எனவே இக்கூட்டங்களில் ஆசிரியர்களும், மாணவர்களும் பங்குபற்றுதல் பயன் தரும்.

இவ்வாறு அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (05)

மட்டு. மெயிலில் தபால் தரம்பிரிப்பு

மட்டக்களப்பிலிருந்து அனுப்பப்படும் தபால் பொதிகள் அடுத்தவாரம் தொடக்கம் இரவுமெயில் ரயில்மூலம் அனுப்பப்படும் என தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்துவரும்தபால் தரம்பிரிக்கும் ஊழியர்களுக்கான தங்குமிட விடுதிவசதிகள் அண்மைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அடுத்த வாரத்தில் தபால் தரம் பிரிக்கும் ஊழியர்கள் வந்து சேருவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (05)

5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு மாவட்ட தபால் திணைக்களத்திற்கு புனரமைப்புத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிராந்தியத்தபால் அத்தியட்சகர் எஸ். அருணகிரிநாதன் முரசொலிக்குத் தெரிவித்தார்.

இந்நிதியிலிருந்து கல்குடா தபால் அலுவலகம், தபால் அதிபர்விடுதி பிரதம தபால் அதிபர் விடுதி ஆகியவற்றின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

மட்டுமாநகரம் இரவில் இருளில்

மட்டு. மாநகரசபைப் பகுதிக்குட்பட்ட சேற்றுக்குடா, வீச்சுக்கல்முனை ஆகிய இடங்களில் தெருவிளக்குகள் பல மாதங்களாக எரிவதில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது.

மாநகரசபை மின்சாரப் பகுதியினருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் இந்த பகுதிகளுக்குப் புதிய தெருவிளக்குகள் பொருத்தப் படவில்லை. (05)

ஆசிரிய நியமனம் 3000 விண்ணப்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களை பயிலுநர் ஆசிரியர்களாக நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் சுமார் 3000 க்கு மேல் கிடைத்துள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாவட்டத்தில் 400 பேர் மட்டுமே தகுதி தொண்டர் ஆசிரியர்களில் 150 பேருக்கு ஏற்கனவே பயிலுனர் ஆசிரிய நியமனம் கிடைத்துள்ளதாகவும் மேற்படி வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 800 ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் இல்லை

கெவிற்லவ மடுவிலிருந்து வெளியேறிய தமிழ் அகதிகளுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிங்கள அகதிகளுக்குத் தொடர்ந்து நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

கெவிற்லா மடுவிலிருந்து வெளியேறிய 250 தமிழ் அகதிகள் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என மட்டு. அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகதரிசன இயக்கத்தின் உதவியுடன்

மாரீசன்கூடல் கிராம மக்கள் பலருக்கு சுயதொழில் இலகுகடன்கள் வழங்கப்படவுள்ளன

உலகதரிசன இயக்கம், இளவாலை மாரீசன்கூடல் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 15,000 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

இப்பணத்தை, அப்பகுதி வறிய மக்கள், தமது பொருளாதாரத்தை, அபிவிருத்தி செய்ய இலகுகடன் அடிப்படையில் வழங்குவதற்குக் கிராமஅபிவிருத்திச்சங்கம் தீர்மானித்துள்ளது.

கறவைமாடு வாங்குபவர்களுக்கு 1000 ரூபா கடனும், மேட்டுநிலப்பயிர் செய்கைக்கு 500 ரூபாவும், கோழிவளர்ப்பிற்கு 500 ரூபாவும், கடன் வழங்க ஆலோசிக்கப்பட்டது.

கடனைப்பெறுபவர் கடன் பெற்ற மூன்றாவது மாதம் தொடக்கம் பத்துமாதத்தில் சமதொகையாக வட்டியுடன் தீர்க்க வேண்டும் எனப்பிட்ட திகதியில் தவணை தவறாமல் கடனடித்தீர்ப்பவர்களுக்கு மீண்டும் கடன்பெறச் சலுகைவழங்கப்படும்.

அக்கிராமம் முழுவதற்கும் சுழற்சி முறையில் இக்கடன் வழங்கப்படும். (37)

அவசரகாலச் சட்டவிதிகளை விரைவில் நீக்கத் தீர்மானம்

தேடுதல் நடத்திச் சந்தேகநபர்களைக் கைது செய்யும் அவசரகாலச் சட்டத்தின் அதிகாரம் நீக்கப்படவுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேலும் பல அவசரகாலச் சட்டவிதிகளை நீக்கிவிட அரசு தீர்மானம் எடுத்துள்ளது.

விசாரணை நடத்தாமற் சடலங்களைப் புதைக்கும் அதிகாரமும் ஏற்கனவே நீக்கப்பட்ட அறு அவசரகால அதிகாரங்களில் ஒன்று

மேலும் நீக்கப்படவிருக்கும் அவசரகாலச் சட்டத்தின் விதிகள் எவை என்பதன் விபரம் இந்த வாரத்திற்குள் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மந்திகை மந்தகதியில்

அரைகுறை நோயுடன் நோயாளர் வெளியேற்றம்

மந்திகை வைத்தியசாலையின் நிலை மேலும் மோசமடைந்து வருகிறது.

போதிய வைத்தியர்கள், தாதிகள் இன்மையால் நோயாளர் பலர் வைத்திய சாலையில் இருந்து அரைகுறை நோயுடன் வெளியேறி வருகின்றார்கள்.

இது விடயமாக அண்மையில் விசேட குழு ஒன்று கொழும்பில் சுகாதார அமைச்சுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் திரும்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இருந்தும் இதுவரை மேற்படி மந்திகை வைத்தியசாலையில் எவ்வித முன்னேற்றமும் இதுவரை ஏற்படவில்லை. இதன்காரணமாக நோயாளர் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றார்கள். (39)

பயிலுநர் ஆசிரியர் தெரிவு

2-வது பட்டியலில் விடுபட்டோரை இங்கு கவனிப்பார் யாருமில்லை

யாழ்மாவட்டப் பயிலுநர் ஆசிரியர் தெரிவில் முதல் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டு இரண்டாம் பட்டியலில் விடுபட்டோரினது மேன்முறையீடு யாழ் கல்வித் திணைக்களத்தால் ஏற்கப்படவில்லை.

இதனால் இரண்டாம்பட்டியலில் விடுபட்டோர் தாம் தெரிவு செய்யப்படாத காரணத்தை அறியமுடியாதுள்ளனர்.

இதுகுறித்து பல தடவை கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்தும் எதுவிதபயனும் கிடைக்கவில்லையெனப் பாதிக்கப்பட்டவர்கள் புகார் தெரிவிக்கின்றனர். (03

முரசொலிக்குவந்த கடிதம்

இவ்வளவு இலகுவில் நன்றி மறக்கலாமா?

ஆசிரியர்
முரசொலி

பத்திரிகைகளில் வெளிவரும் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு பற்றிய செய்தி எமக்கு வேதனையை தருகின்றது. இவை அழிப்புக்காகவும் இவ்வூரை சுத்தம்செய்வதற்கும் இந்தியப் படையினர் இரவுபகல் நாயைப்போல் வீதிகளில் அலைந்த நேரம் இந்த நான்குகால் ஜீவன்கள் அமைதிப்படையின் விசேட நாற்றத்தை மோப்பசக்தியால் அறிந்து குரல் கொடுத்ததால் எத்தனைபேர் ஒளிந்துகொள்ள இலகுவாயிருந்தது. ஆதலால் மக்கள் அழிக்கப்படும்போது நாய்கள் உதவிசெய்தன. அதே போல் நாய்கள் அழிக்கப்படும்போது அவற்றைக் காப்பாற்றுவது எமது கடமை அல்லவா? ஆகவே ஒவ்வொருவரும் உங்கள் நாயை பாதுகாப்பாக வளர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் தி. ரமேஷ்
ச. நித்தியானந்தன்

இந்த அதிபர்களுக்கு மட்டும் இப்படியொரு சலுகை ஏன்?

ஆசிரியர்
முரசொலி

யாழ் கல்விக் கோட்டத்தில் உள்ள யாழ். வண். மேற்கு கொத்தணி அதிபரின் கீழ் வரும் பாடசாலைகளுள் சில பாடசாலை அதிபர்கள் கொத்தணி அதிபர் ஊடாக யாழ் கல்விக் கோட்டத்தோடு தொடர்பு கொள்ளாமல் தங்கள் விருப்பத்திற்கேற்ப யாழ் கல்விக் கோட்டத்தோடு தொடர்பு கொண்டு தங்கள் கருமங்களைச் செயற்படுத்துகிறார்கள். இதே போல கல்விக் கோட்டமும் கொத்தணி அதிபருடாகவல்லாது நேரடியாகவே இப் பாடசாலைகளுடன் தொடர்பு கொள்கிறது. இதனால் இப் பாடசாலைகளைப் பற்றி பெற்றோர்கள் தெரிவிக்கும் குறைபாடுகளை விசாரிக்க கொத்தணி அதிபரால் முடிவதில்லை யாழ் கல்விக் கோட்டத்திற்குள் வரும் மற்றைய கொத்தணி அமைப்புக்குள் உள்ள பாடசாலை அதிபர்கள் அவ்வக் கொத்தணி அதிபர் ஊடாக செயற்படும் போது யாழ் வண். மேற்கு கொத்தணிக்குள் உள்ள சில பாடசாலை அதிபர்கள் இவ்வாறு செயற்பட அனுமதிப்பது ஏன்? யாழ் கல்விக் கோட்டம் இதற்கு ஊக்கமளிப்பதும் ஏன்? இது பற்றிய விசாரணை ஒன்றை யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்வாரா?

முஸ்லிம்பகுதி
யாழ்ப்பாணம்.

எஸ் எம் சுல்தான்முகிதீன்.
முன்னாள் மாவட்ட அபிவிருத்திச்சபை
-அங்கத்தவர்

கற்பக விநாயகர் கும்பாபிஷேகம்

யாழ். கச்சேரி–நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகிய மஹா கும்பாபிஷேக விழா இம்மாதம் முப்பத்தோராந்திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. கடைசி நாளன்று சங்காபிஷேக விழா மிகச்சிறப்பாக இடம்பெறவுள்ளது மேற்படி விழாவின், ஒவ்வொரு நாளிரவின் போதும், விசேஷ சமயக்கலை நிகழ்ச்சிகள் நடக்கவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி கிழக்கு பெற்றோர் திருப்தி

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப்பரீட்சை முடிவுகள் வடமராட்சி கிழக்குப்பகுதிப் பெற்றோருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

இப்பகுதியில் உள்ள உடுத்துறை மகாவித்தியாலயத்தில் பரீசைக்குத் தோற்றிய 7 பேரில் 6 பேர் சித்தியடைந்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் மேற்படி பாடசாலையில் மட்டுமே க.பொ.த. உயர்தர வகுப்பு உண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நல்லை ஆதீனத்தில்

உலர்வலய அபிவிருத்தி நிறுவனத்தின் கலாமன்றம் வழங்கும் மாதாந்த கர்நாடக இசை நிகழ்ச்சி இன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராகவே ஞானேதரன் கலந்து கொள்கின்றார் இந்நிகழ்ச்சியில் செல்வி நிவதாருணி குணரட்ணம் புல்லாங்குழல் வாசிக்கவுள்ளார்.

சுவையான செய்திகள்

சிகரெட்டை ஊதித்தள்ள ஓ.... ஒன்றுமேயில்லை

புகை பிடிக்காமல் வாழ்க்கையை ஓட்டமுடியாது என்று நினைப்பவர்களுக்கு ஒரு ஜப்பானிய கம்பனி புகையில்லாத சிகரெட்டை விற்பனை செய்யப்போகிறது. சிகரெட்டின் பெயர் "22" இதில் ஒரு பிளாஸ்டிக் ஸிலிண்டர் புகையினையுடன்கூடிய புளக் சொருகி இருக்கும். அதைப்பற்றவைக்க லைட்டர் தேவையில்லை புகை வருவதில்லை, சாம்பலும் வருவதில்லை நாம் எவ்வளவு தான் உள்ளுக்கிளுத்தாலும் 50 நிமிடங்களுக்கு ஒரு முறை வில்லாமல் புகைபிடிக்கலாம். இது சாதாரணமாகபுகை பிடிப்பதுபோல்தான் நமக்கு உணர்வை ஏற்படுத்தும். ஆனால் சாதாரண புகைப்பிடிப்பதில் நிக்கோடின் உள்ளே போவதில் நூறில் ஒரு பங்குகூட இதில் போவதில்லை. இந்த சிகரெட் வந்தால் சிகரெட் புகையால் அவதிப்படுபவர்களுக்கு சந்தோஷம்தான்.

அவர்கள் மயக்க இவர்கள் மறக்க...

கடந்த மாதம் லண்டன் கடற்படை அலுவலகம் முன்பு கடற்படை மாலுமிகளின் மனைவிகள் ஒரு போராட்டம் நடத்தினார்கள் இங்கிலாந்து கடற்படையில் பெண்களை சேர்த்துக்கொள்ள இங்கிலாந்து அரசு முடிவு செய்ததுதான் இந்தப் போராட்டத்திற்கான காரணம்! கடற்படையினரின் மனைவிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க காரணம் 'பெண்களையும் கடற்படையில் சேர்த்துக்கொண்டால் கூட வேலை செய்யும் பெண்களை எங்கள் கணவன்மார்களை மயக்கிவிடுவார்கள் பிறகு எங்களைக் கணவர்கள் மறந்து விடுவார்கள் எனவே பெண்களைக்கடற்படையில் சேர்க்கக்கூடாது என்பதுதான். இங்கிலாந்துப் பெண்கள் ரொம்பவும் முன்னெச்சரிக்கையாளர்களிதான்.

முல்லை. மாவட்டத்தில்

இரு தனியார் பாடசாலைகள் கல்வித்திணைக்களம் சுவீகரிப்பு

முல்லைத்தீவு கல்வித் திணைக்களம் இருதனியார் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுள்ளது.

முறிகண்டி அக்கராயன் வீதியில் கத்தோலிக்க குருமாரினால் கட்டப்பட்ட அமைதிபுரம், ஆரோக்கியபுரம் ஆகிய இரு பாடசாலைகளே பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் எஸ். எஸ். மனோகரன் மாங்குளம் கொத்தணி அதிபர் அ. சண்முகரதினம் ஆகியோர் இவற்றைப் பாரமேற்றுக் கொண்டனர். (38)

யாழ். மருத்துவபீட

இறுதியாண்டு மாணவர்க்கு நியமனம் வழங்க கோரிக்கை

யாழ் மருத்துவப் பீட இறுதி யாண்டுத் தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சொலப் பட்டியலினபடி அரச நியமனங்களை வழங்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சருக்கு கோரிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளது.

வடகொழும்பு பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் நோக்கத்தைக் கண்டித்தும் யாழ்,கொழும்பு, பேராதனை ஆகிய பல்கலைக்கழக மருத்துவ பட்டதாரிகளுக்கு அரசநியமனத்தில்முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தியுமே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஜே. வி. பி. பறிமுதல் செய்த தேசிய

அடையாள அட்டைகளுக்கு பதிலாக புதிய அட்டைகள்

தென்னிலங்கைத்தீவிரவாதிகளிடம் அடையாள அட்டைகளைப் பறி கொடுத்தவர்களுக்கு பிரதி அடையாள அட்டைகள் வழங்கப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஜே. வி. பி. யினரால்கடந்த சில மாதங்களுக்குமுன் தென்னிலங்கையிலும் மலையகத்திலும் பொதுமக்களின் அடையாள அட்டைகள் கவர்ந்து செல்லப்பட்டமை தெரிந்ததே.

இதேநேரம் மாத்தறைப் பகுதியில் 1195 தேசிய அடையாள அட்டைகள் வீடு ஒன்றுக் குள்ளிருந்து பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் இலங்கை வங்கி விசா கார்ட்

வாடிக்கையாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள் போன்றோருக்கு சீபாங் விசா அட்டை வழங்கும் முறை மட்டக்களப்பு இலங்கை வங்கியில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியின் செங்கலடிக் கிளை ஏற்கனவே இருபத்து ஐந்து வாடிக்கையாளர்களுக்கு இந்த சீபாங் விசா அட்டையை விநியோகித்துள்ளது. (05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானெலியில் இன்று

25.03.90 ஞாயிறு காலை

5 05 தோத்திரமாலை- பத்மநாப சுப்ர பாதம்
5.30 பாமாலை- சூரிய நமஸ்காரப் பாடல்கள்
8.00 கிறிஸ்தவ கீதங்கள்
8.15 மெலிசைப் பாடல்கள்-அழுதின் அண்ணுமலை பகல்
10.00 கல்விச்சேவையில் ஆங்கிலப் பாடம்
10.30 வீடே நாடகம்- சே எஸ்.பாலச் சந்திரன்
10.45 பூவையர் பூங்கா- நடத்துபவர்: சற்சொரூபவதி
11.15 சிறுவர் மலர்- வானெலி மாமா
11.45 நேயர் கடிதம் மாலை
6.15 ஜிந்துப்பிட்டி சிவ சுப்பிரமணிய சுவாமிகோவிலில் இருந்து பூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் அஞ்சல்
6 45 கிறிஸ்தவ கீதங்கள்
7.00 கிறிஸ்தவநிகழ்ச்சி
7.30 ராகரசம் இசை
9.30 எப்படிப்பாடி னரோ- கவிதைச் சித்திரம்
9.45 இசைக் கச்சேரி
10.45 நிசைவில் நிறைந்தவை

புதிய சபாநாயகர்

பாண்டிச்சேரி சட்ட சபை சபாநாயகராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. வி. பழனிராஜா நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

சுவரொட்டியில் உள்ள ,·

– 3 -ம் பக்கத் தொடர்ச்சி

மக்கள் வீதிக்குக் குறுக்கே அங்கும் இங்கும் இடம் மாறுவதால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன

இதனைத் தடுக்க வேண்டுமானால் திரைப்படங்கள் முடிவடையும் நேரத்தை சில நிமிட நேரம் தாமதப்படுத்த வேண்டும். இப்படிச் செய்வதால் ஒரே நேரத்தில் ஏற்படும் நெருக்கடியை குறைக்க முடியும்.

இப்போது சில திரையரங்குகளில் விபசாரிகளின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இப்போது புதிய புதிய விபசாரிகளை நகரிற் காணமுடிகின்றது. இவர்களால் சமுதாயத்திற்கு பலவித நோய்கள் ஏற்படலாம், எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவர்களைக் கைது செய்து சீர்திருத்த நிலையங்களுக்கு அனுப்பி புனர்வாழ்வு அளிக்க முன்வரவேண்டும்.

இன்றேல் இவர்களால் 'எயிட்ஸ்' போன்ற நோய்கள் ஏற்படலாம். வெள்ளம் வந்த பின் அணை கட்டுவதிலும் பார்க்க வெள்ளம் வருமுன் அணை கட்டுவது நல்லதல்லவா?

தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் பொழுது போக்குவதற்காக இருக்கின்ற ஒரு இடம் திரையரங்கு ஒன்று தான். அங்கு கூட அவர்கள் பொழுது போக்குவதற்கு ஏற்ற வசதிகள் இல்லை என்றால் தமிழ் மக்கள் தற்போது உள்ள நிலையில் பொழுது போக்க எங்கு போவது... பொழுது போக்க நல்ல இடம் கிடைத்தால் சொல்வீர்களா?

யாழ். பாடசாலை கிரிக்கெட் அணிகள் அறிமுகம்

தொகுப்பு கப்டன் டி. குணசிங்கம்
(விளையாட்டுத்துறை நிருபர்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளின் கிரிக்கெட் அணிகள் அறிமுகத் தொடரில் இன்று யாழ். சென்றல் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றனர்.

சென்றல் கல்லூரி

அணித் தலைவர்
கே. முகுந்தன்

அணி உபதலைவர்
என். சுரேந்திரஜித்

கே. முகுந்தன் அணியின் தலைவர். (Colours) களைப் பெற்றவர், இருப்பு மனிதன் என்று சகவீரர்களால் வர்ணிக்கப்படும் இவர் சகல துறைகளிலும் வல்லவர்.

என். சுரேந்திரஜித்- மூன்றாவது வருடம், அணியின் உப தலைவர். நம்பிக்கைக்குரிய வலது கை ஆரம்ப துடுப்பாட்டக்காரர், ஒட்டங்களை விரைவாக எடுப்பதில் வல்லவர், எந்த இடத்தில் நின்றும் பந்தை தடுப்பதில் சமர்த்தர்.

எம். பேரூட்நமேஸ்- இரண்டாவது வருடம். 3 வது ஆளாக துடுப் பெடுத்தாடும் இவர் பந்தை அநாயசமாக இரு பக்கங்களும் அடிக்கக் கூடியவர். அவுட் ஃபீல்டில் நின்று பந்தைத் தடுப்பதிலும் வல்லவர்.

டபிள்யு எஸ். எம். சாஜித்- இரண்டாவது வருடம், பந்தை அடித்து ஆடும் வலதுகை ஆரம்ப துடுப்பாட்டக்காரர். நடுத்தர வேக பந்து வீச்சாளருமாவார்.

எஸ். நந்தகோபாலன்- மூன்றாவது வருடம், விக்கற் காப்பாளர் இல்லாத சமயங்களில் அவரின் இடத்தை நிரப்புபவர். அவசியம் ஏற்படும் பொழுது நிதானமாக ஆடி ஒட்டங்களைச் சேர்க்க வல்லவர்.

சிறிசங்கர்- இரண்டாவது வருடம், இடது கை ஆரம்பத் துடுப்பாட்டக்காரர். நான்கு திசைகளிலும் பந்தை அடித்து ஆட வல்லவர்.

எஸ். ஜெயசீலன்- இரண்டாவது வருடம், வலது கை துடுப்பாட்டக்காரர் ஆனால் இடது கை நடுத்தர வேக பந்து வீச்சாளர்.

யே. முகுந்தன்- புது முகம், வலது கை துடுப்பாட்டக்காரர் இடது சுழல் பந்து வீச்சாளர், அண்மையில் நின்று பந்தை தடுப்பதிலும் கெட்டிக்காரர்.

கே. பிரபாகரன்- இவரும் ஒரு புதுமுகம். இடது கை வேகப் பந்து வீச்சாளர், வலது கை துடுப்பாட்டக்காரர் இடது பக்கமாக நின்று பந்தை தடுப்பதிலும் சமர்த்தர்.

ஆர். நகுதாஸ்- முதல் வருடம், வேகப் பந்து வீச்சாளர் வேகமாக பந்தை அடிதீது விரைவாக ஒட்டங்களைப் பெறுவதில் வல்லவர்

எம் பிஸ்றுல் ஹவ்வி- முதல் வருடம் நடுத்தர வேகப் பந்து வீச்சாளர். பந்தை வேகமாக அடித்து ஆடக் கூடியவர். ஆறுகள் அடிப்பதிலும் கைதேர்ந்தவர்.

பி. அருளானந்தன்- இரண்டாவது வருடம், வலது கை நடுத்தர வேகப் பந்து வீச்சாளர் நிதானமாக பந்தை தடுத்து ஆடுவதில் வல்லவர்.

பி. ஆர். நிதஞ்சன்- அணியின் பேபி என்றழைக்கப்படும் இவர். பந்தை மின்னல் வேகத்தில் அடித்து விரைவாக ஒட்டங்களைக் குவிக்கக் கூடியவர்.

ஐ. மகிந்தன்- புது முகம், வலது கை நடுத்தர பந்து வீச்சாளர். சிலிபபில் நின்று பந்து தடுப்பதிலும் கெட்டிக்காரர்.

ஆர். ஆர் மோகன்- முதல் வருடம், ஆரம்ப துடுப்பாட்டக்காரருள் ஒருவர். எந்த இடத்திலும் நின்று பந்தைத் தடுக்கக் கூடியவர்.

என். செந்தூரன்- புதுமுகம், வலது கை துடுப்பாட்டக்காரர், இடது சுழல் பந்து வீச்சாளர்.

விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்- திரு. வி. ரி. கணேசலிங்கம்.

பயிற்றுனர்- திரு. ஜீ. எஸ். சாந்திகரன்,

கொக்குவில் இந்துக் கல்லூரி

அணித்தலைவர்
கே. சுதாகரன்

அணி உபதலைவர்
என். பிரபாகரன்

கே. சுதாகரன்- மூன்றாவது வருடம், பண்டா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் இவரே அணியின் தலைவர், ஆரம்ப துடுப்பாட்டக்காரர், சகல துறைகளிலும் வல்லவர்.

என். பிரபாகரன்- அணியின் உபதலைவர், இரண்டாவது வருடம், இடதுகை சுழல்பந்து வீச்சாளர்.

கே. இராஜீபத்மநாதன்- இரண்டாவது வருடம், இடதுகை நடுத்தர வேகப்பந்து வீச்சாளர்.

ஆர். ராஜ்குமார்- இரண்டாவது வருடம், அணியின் பந்து காப்பாளர்.

எஸ். ஐங்கரலிங்கம்- அதிரடி வீரர், வலதுகை வேகப் பந்து வீச்சாளர், சகலதுறைகளிலும் பிரகாசிக்கக் கூடியவர்.

வி பிரதிப்ராஜன்- புதுமுகம் ஆரம்ப வலதுகை வேகப்பந்து வீச்சாளர், சென் ஜோன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 60 ஒட்டங்களைப் பெற்றவர்.

ஆர். சுபாகரன்- இடதுகை நடுத்தர வேக பந்து வீச்சாளர், பந்தை அடித்தாடி விரைவாக ஒட்டங்களைக் குவிக்கக் கூடியவர்.

எஸ். நவீந்திரன்- முதல் வருடம், மின்னல் வேகத்தில் பந்தை நாலு திசைகளிலும் அடித்தாடக்கூடிய அதிரடி வீரர்.

கே. ஜெயன் மனோகர்- புது முகம், சிறந்த பந்து தடுப்பாளர், நின்று நிதானமாக துடுப் பெடுத்தாடுவதில் நிபுணர்.

பி. ஜெயராகவன்- புதுமுகம் ஆரம்ப துடுப்பாட்டக்காரர், சிலிப்பில் நின்று பந்தை தடுப்பதில் கெட்டிக்காரர்.

எஸ். சிறிதரன்- நின்று நிதானமாக துடுப் பெடுத்தாடக் கூடியவர், இடதுகை நடுத்தரப் வேகப்பந்து வீச்சாளர்.

எம். சஞ்சீவன்- இரண்டாவது வருடம், இடதுகை துடுப்பாட்டக்காரர், சிறந்த பந்து தடுப்பாளர்.

வி. ஆரூரன்- புதுமுகம், நம்பிக்கையான வலதுகை துடுப்பாட்டக்காரர்.

பி. பிரேமசீலன்- புதுமுகம், வலதுகை துடுப்பாட்டக்காரர், சகலதுறைகளிலும் சிறந்த இவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு.

கே. கண்ணன்- புதுமுகம் வேகப்பந்து வீச்சாளர். வலதுகை துடுப்பாட்டக்காரர்,

பி. சத்தியஜித்- புதுமுகம் வேகப்பந்து வீச்சாளர்.

விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர்

எஸ், உமாசங்கர்

பயிற்றுனர்-

திரு. ஆர். செல்வராஜ்

எழுதுவினைஞர் சங்க யாழ்.கிளை மீண்டும் இயங்க ஆரம்பம்

கடந்த சில ஆண்டுகளாக அரசியல் சூழ்நிலை காரணமாக இயங்க முடியாது செயலிழந்திருந்த அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை புனரமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளது.

யாழ். கல்வித்திணைக்கள அலுவலகத்தில் இப்புனரமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நீண்டகால உறுப்பினரான செ. பரராசசிங்கம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கயாழ்கிளையைப்புனரமைப்புச் செய்து வைத்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் சங்கம் தீவிரமாக இயங்க வேண்டிய அவசியம் பற்றி அவர் தனதுரையில் குறிப்பிட்டார் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இவ்வருட மத்தியில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட இருப்பதால் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அவர் சங்க உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். (36)

சமாதான நீதவான்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை இராஜரத்தினம் சமாதான நீதவானாக மாஜிஸ்ரேட் நீதிமன்ற மேலதிக மாஜிஸ்ரேட் என் யோக சொமணி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் தற்பொழுது மெற்ற பொலிஸ் பாதுகாப்பு உத்தியோகஸ்தராக யாழ் அதிகளுக்கான உயர்ஸ்தானிகர் காரியலயத்தில் கடமையாற்றும் இவர் முன்னர் பொலிஸ் உதியோகத்தராகக் கடமையாற்றியுள்ளார்.

சுகாதார நிலையம் அரைகுறையில்

பேசாலை வைத்தியசாலையில் 1982-ம் ஆண்டு முதல் புதிய சுகாதாரத் திட்டத்திற்கமைய நிர்மாணிக்கப்பட்டுவரும் பிரதேச சுகாதாரநிலைய வேலைகள் பூர்த்தியடையாது அரைகுறையாக இருப்பது குறித்து மக்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். பெரிய அளவில் திட்டமிடப்பட்ட இந்தச் சுகாதார நிலைய கட்டிட வேலைகள் விரைவில் முடித்து பொதுமக்களின் சேவைக்கு விடும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொள்கிறார்கள். (17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ யாழ் ஜெய்ப்பூர் செயற்கை கால் தொழிற்சாலையில்

இதுவரை 316 அங்கவீனர் செயற்கைக் கால்களை வடக்கில் பெற்றனர்

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையில் இதுவரை 316 பேருக்கு செயற்கைக்கால் பொருத்தப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கால்களை இழந்திருப்பதாக கணிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரைசுமார் 400 பேர் மட்டுமே செயற்கைக்கால் பொருத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர் என யாழ் அன்னையர் முன்னணி தலைவியும், யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலைப் பணிப்பாளருமான திருமதி இ. மேதர் தெரிவித்தார்.

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தப்பட்டோர் சங்கத்தின் 2வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெய்ப்பூர் அங்கவயம் பொருத்தப்பட்டோர் சங்கத் தலைவர் திரு இ பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற மேற்படி 2வது பொதுக் கூட்டத்தில் நான்கு அங்கவீனமுற்றோருக்கு 3 சக்கரவண்டிகளும், ஒரு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டன.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம், லயன்ஸ் கிளப், சென் பற்றிக்ஸ்உபதலைவர் வணபிதா ஜெகநேசன் ஆகியோரின் ஆதரவில் மேற்படி முச்சக்கர வண்டிகளும், சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன.

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையின் புனர்வாழ்வுத் திட்ட பணிப்பாளர் வண. சகோ. லூட் ஜோசப் உரை நிகழ்த்துகையில்:

தாம் அங்கவீனமுற்று விட்டோம் என மனம் தளராது இவர்களும் சமூகத்தில் எந்த நிறைவு பெற்றவர்களாக உழைப்பாளிகளாக திகழ வேண்டும்.

தொழில் வாய்ப்புகளை பெற்றுத்தர நாம் உதவி புரிவோம். நாம் அமைத்திருக்கும் கோழிப் பண்ணை போன்ற தொழில் நிலையங்களில் வேலைவாய்ப்பை பெற முன்வரவேண்டும் என்றார்.

மேற்படி 2வது பொதுக் கூட்டத்திற்கு திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், கல்முனை, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து வருகைதந்திருந்த பிரதிநிதிகளுக்கான தங்கு மிடவசதிகளை ஜெய்ப்பூர் செய்கைக்கால் தொழிற்சாலை நிர்வாகமும் யாழ் அன்னையர் முன்னணியினரும் செய்திருந்தனர். (05)

எம். பி. ஒருவரின் ஒரு சொல் 3 ரூபா 50 சதம் பெறுமதி

பாராளுமன்றத்தில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு சொல் பேசுவதற்கு பொது மக்களின் பணத்தில் மூன்று ரூபா ஐம்பது சதம் தேவைப்படுகிறது. இதற்கமைவே இணையமைச்சர் ஆரியரட்ன ஜெயதிலக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இதேவேளை பாராளுமன்றத்தை பராமரிப்பதற்கென இவ்வாண்டு 352 மில்லியன் ரூபாக்கள் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.பி.மாரின் பாதுகாப்பிற்கு ஒரே ஒரு ரிவோல்வர் மட்டும்

பாராளுமன்றஉறுப்பினர்கள் தமது பாதுகாப்பிற்கென ஒருரிவோல்வரை மட்டுமேவைத்துக் கொள்ள முடியும்,

இவ்வாறு வெளிநாட்டு அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை யளிக்குமாறு அரசுவேண்டுகோள்விடுத்தையடுத்து இதுவரை1364 ஆயுதங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் சுமார் மூவாயிரம் கையளிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

உடுவில் உ:அ: அதிபர் பிரிவிற்கு இன்று 2-ம்கட்ட நிவாரணம்

யாழ்ப்பாணம் ஸ்ராண்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை ஏழாலை வடக்கு, சுன்னாகம் கிராமசேவைப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும், ஏழாம் திகதி ஏழாலை தெற்கிற்கும் எட்டாம் திகதி ஏழாலை மேற்கிற்கும், ஒன்பதாம் திகதி புன்னாலைக்கட்டுவன் கிராம சேவையாளர் பிரிவிற்கும் இந்நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் வந்துசேர்ந்தன

மரணமடைந்தோர் விபரம் யாழ், செயலகத்தில் பதியலாம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1983 ஆண்டு யூலை 24 ஆம் திகதிக்குப் பின்னர் இடம் பெற்ற வன்செயல்களின் போது காயமடைந்த மற்றும் மரணமடைந்தவர்களில் இதுவரை பதியாதவர்களை பதியும் வேலைகள் யாழ். மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னர் பதிந்தவர்கள் புதிதாகப் பதிய வேண்டியதில்லை.

கடந்த சில வாரங்களாக இவ்வேலைகள் விண்ணப்பப்படிவம் இல்லாமையால் ஸ்தம்பதமடைந்திருந்தன. கொழும்பில் இருந்து இந்த விண்ணப்பப்படிவங்கள் வந்ததையடுத்தே பதிவு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (03)

இந்தியப்படை வெளியேற்றத்தைக் குறித்து இன்று வடமராட்சியில் ஊர்வலம் அன்னதானம்

(உடுப்பிட்டி)

நேற்று இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து இன்று வடமராட்சியில் வல்வெட்டித்துறை, நெல்லியடி ஆகிய பகுதிகளில் மாபெரும் ஊர் வலங்கள் நடாத்த திட்டமிடப் பட்டுள்ளது இவ்வூர்வலத்தில் பல பகுதிகளிலும் இருந்து வரும்பொது மக்களும் இணைந்து கொள்ளவுள்ளனர்.

ஊர்வலத்தை தொடர்ந்து மாலை நான்கு மணியளவில் வல்வை பிரதான வீதிகளூடாக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி வரதராஜப் பெருமாள் போன்றோரின் கொடும் பாவிகள் மக்களால் இழுத்துச் செல்லப்பட்டு வல்வை சந்தியில் தீக்கிரையாக்கப்படவுள்ளன. இதைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் ஒன்றும் அன்னதான வைபவம் ஒன்றும் வல்வை சந்தியில் இடம் பெறவுள்ளது.

இதே சமயம் நெல்லியடிப் பகுதியிலும் பிரதான வீதிகளூடாக ஊர்வலமும்கொடும் பாவி எரிப்பும் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது. (39)

புங்குடுதீவில் இன்று பொதுக்கூட்டம்

இன்று மாலை புங்குடுதீவு கந்தசுவாமி கோவிலுக்கருகாமையில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இதில் தீவுப் பகுதி விடுதலைப்புலிகள் அரசியல் பிரமுகர்கள் கருத்துரை கலை வழங்குவார்கள் தொடர்ந்து கலை, கலாசாரப் பிரிவினரின் "நடந்து வந்த பாதை" வில்லிசையும் கவிதாலயா இசைக்குழுவினரின் "விடுதலைக் கானங்கள்" இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளன.

இன்றுமாலைமணிக்கு யாழ் ஜின்னாவிளையாட்டு மைதானத்தில் மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளது இதில்விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பிரமுகர்களினதும் முஸ்லிம் பிரமுகர்களினதும் சொற்பொழிவுகள்இடம் பெறவுள்ளன,

பலாலி ஆசிரிய கலாசாலையை மீளப் பலாலியில் இயக்க முயற்சி

பலாலி ஆசிரியர் கலாசாலையை மீண்டும் அதே இடத்தில்இயங்கவைக்கநடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதற்கான முயற்சியையாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர், தமிழர் ஆசிரியர்சங்கம், யாழ் அரசாங்க அதிபர் என்போர் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காகக் கல்விஅமைச்சரையும், தேவையாயின் ஜனாதிபதியையும் சந்திக்கும் முயற்சியும் மேற்கொள்ளப் படுகின்றது.

கடந்த இந்திய இராணுவ நடவடிக்கையின்போது இக் கலாசாலை அவர்களின்தலைமை பணிமனையாகச்செயற்பட்டது தெரிந்ததே.

இதைத்தொடர்ந்து பலாலி ஆசிரியகலாசாலை மிகச்சிரமத்துடன் கோப்பாய் மகாவித்தியாலத்தில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (32)

தமிழ் மக்கள் ...

ராஜதந்திர நடவடிக்கையாகவே நாம் பேச்சுக்களில் கலந்து கொண்டோம் என்று பாலசிங்கம் தெரிவித்தார். 05

புலிகளின்...

இருந்தால் என்ன செலவு ஒன்றேதான். சில அதிகாரிகள் கூறுவது போல் மேலதிக பணம் எதுவும் செலவழிக்கப் படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ரஞ்சன்...

காலை திருமலைக்கு விஜயம் செய்த அமைச்சர் அமைதிப் படை பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டார்.

அதனை அடுத்து முப்படைத் தளபதிகள், அதிகாரிகள் சகிதம் வவுனியா, பலாலி முகாம்களுக்கும் விஜயம் செய்த அமைச்சர் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். (5)

சென்ஜோன்ஸ்...

நீண்ட இடை வெளிக்குப் பின்பு இடம் பெற்ற இப் போட்டியில், முதலாவது இனிங்ஸில் முதலாவதாகத் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் கல்லூரி அணி, தனது விக்கெற்றுகள் முழுவதையும் மிக விரைவாக இழந்து, மொத்தம் 156 ஒட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸை ஆடவந்த யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டத்தின் போதே நான்கு விக்கெற்றுகள் இழப்பிற்கு 276 ஒட்டங்களைப் பெற்றுக் கொண்டதோடு; நேற்றைய தினம் இடம் பெற்ற இரண்டாவது நாள் ஆட்டத்தில் மேலும் ஒரு விக்கற்றை றாத்திரம் இழந்து 5 விக்கெற்றுகளுக்கு 311 ஒட்டங்களை மொத்தமாகப் பெற்றுத் தனது முதல் இனிங்ஸை நிறைவு செய்தது தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆடத் தொடங்கிய யாழ். சென்றல் கல்லூரி அணி மள மள வென்று விக்கெற்றுகள் முழுவதையும் இழந்து தனது முதல் இனிங்ஸ் ஒட்ட எண்ணிக்கையை விடக் குறைவாக 127 ஒட்டங்களை மட்டும் பெற்றதன் மூலம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியிடம் இனிங்ஸ்ஸால் தோல்விகண்டது.

இப் போட்டியை இரு சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஆகக் கூடுதலான ஒட்டங்களை சென். ஜோன்ஸ் சுரேன்குமார் பெற்றுஆயார் முன்னர் சென்றல் அணியின் போல்பிரகலாதன் இச்சாதனையை ஏற்படுத்தியிருந்தார். ஒரு இனிங்ஸில் ஆகக்கூடுதலாக சென்றல் அணிபெற்ற ஒட்டங்களை இம் முறை சென். ஜோன்ஸ் இச் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப்படை...

மான திரு ரஞ்சன் விஜரத்ன தமதுரையில்:-

நாட்டுக்கு நீங்கள் செய்த தியாகத்தை இலங்கை மக்கள் மறக்கமாட்டார்கள் இலங்கை இந்திய நட்புறவு நீடிக்க வேண்டும் என குறிப்பிட்டார்

அன்னை...

நகரிலுள்ள பெருந் தொகையான மாணவ மாண விகளும் ஆசிரியர்களும் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

நேற்றைய...

முன்னைய அரச செயற்பாட்டையே. இந்தியப்படை வெளியேற்றத்துடன் புதிய இந்திய அரசுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளவே தாம் விரும்புகிறோம்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படக்கூடிய புதிய நட்புறவு ஒப்பந்தத்தில் தமிழ் மக்களின் நலனை இந்திய அரசு பேணவேண்டுமென நாம் வலியுறுத்தியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஹமீத்...

கலைச் சந்தித்து முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் இந்த விஜயம் ரத்துச் செய்யப் பட்டுள்ளதாக மேற்படி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதி...

உடைமைகள், பொருட்கள் அடங்கிய தொகுதிகள் வேறு இரண்டு கப்பல்களில் ஏற்றிச் செல்லப்பட்டன. இந்தியப் படை ஜவான்கள் வரிசையாக கப்பல்களில் ஏறிக் கொண்டதும் கடைசியாக படைத்தளபதி லெப், ஜெனரல் கல்கட் கப்பலில் ஏறிகொண்டார், இந்தியப்படை விலகலை பார்வையிட பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன இந்திய தூதுவர் மல்ஹோத்திரா, இந்திய இலங்கைபடைத் தளபதிகள் ஆகியோர் துறைமுகத்தில் கூடியிருந்தவர்,

உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர்களும் இறங்குதுறையில் நிறைந்து காணப்பட்டனர் பலரிடம் இவர்கள் பேட்டிகள் எடுத்தவண்ணமும் புகைப்படங்கள் எடுத்தவண்ணமும் சுறுசுறுப்பாக காணப்பட்டனர்,

நேற்றைய இந்தியப்படை விலகலை முன்னிட்டு நேற்று திருமலை துறைமுக இறங்கு துறையில் இலங்கை படைகளின் அணிவகுப்பு மரியாதை நிகழ்ச்சிகளும் பாண்ட் வாத்திய இசையும் காலையில் இடம்பெற்றது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் ஸ்ராண்லிவீதி 62ல இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 25-03-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org